O.S.83-2018

# முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

அ.வ.எண்.83/2018

வாதி தரப்பு 1வது சாட்சி மனிஷா என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மனிஷா | வயது | : | 22/24 |
| தகப்பனார் பெயர் | : | செந்தில்குமார் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | குளத்தூர் நாயக்கன்பட்டி | தொழில் | : | தனியார் நிறுவனத்தில் வேலை |

நாள்-24.10.2024

வா.சா.1

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) தாவா 'ஆ' அட்டவணை சொத்தில் தான் 1/3 பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். அதில் 1, 2 சொத்துக்கள் மூர்த்தி வாங்கிய சொத்துக்கள் என்றால் எனக்கு தெரியாது.

2) நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.23, 24 ஆவணங்கள் 'ஆ' அட்டவணை சொத்தில் உள்ள 1 மற்றும் 2 வது சொத்தாகும். அந்த சொத்துக்கள் எனது பெரியப்பா மூர்த்தி கிரையம் வாங்கிய சொத்துக்கள் என்றால் சரிதான்.

3) பாலகிருஷ்ணன் நாயுடுவிற்கு, குப்புசாமி நாயுடு எழுதி கொடுத்த ஆவணம் என்றால் படித்துபார்த்தால் அப்படித்தான் உள்ளது. அதுபற்றி எனக்கு தெரியாது.

4) தற்போது என்னிடம் காட்டப்படும் 2013 அக்டோபர் மாதம் 10ம் தேதி ஆவண எண்.2447/2013 என்ற ஆவணத்தில் எனது அப்பா கையெழுத்து போட்டுள்ளார் என்றால் ஆமாம். அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ.3** ஆகும்.

5) தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவண எண். 633/2005 எனது தகப்பனார் விற்கப்பட்ட ஆவணம் என்றால் அப்படித்தான் உள்ளது. அதுபற்றி எனக்கு தெரியாது.

6) நாங்கள் விற்ற சொத்து, எனது அப்பா விற்ற சொத்து அனைத்தையும் மறைத்துதான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அந்த ஆவணங்களை குறியீடுசெய்தால் எனக்கு பாதகம் ஏற்படும் என்பதால் தான் அந்த ஆவணங்களை பற்றி தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7) தாவா 'ஆ' அட்டவணை சொத்தில் 6 வது அயிட்ட சொத்தில் எனது தகப்பனார் தான் மீனாட்சிக்கும், உமா என்பவருக்கு விற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை பொதுவாக விவசாயம் பார்த்து வந்தார்கள், தற்போது எனது பெரியம்மாதான் விவசாயம் செய்து வருகிறார். அந்த விவசாயத்தில் எங்களுக்கு சம்மந்தம் இல்லை என்றால் தற்போது விவசாயம் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். எனக்கும் அந்த சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்யும் காலத்தில் எனது பெரியம்மாதான் சொத்தை விவசாயம் செய்து வந்தார் என்றால் ஒத்திக்குவிட்டு பார்த்து வருகிறார்.

8) நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் வழக்கு சொத்தை அனைவரும் சேர்ந்து கூட்டாக விவசாயம் செய்து வருகிறோம் என்று சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல.

9) நாயக்கர்பட்டியில் உள்ள வீட்டிற்கு எனது அம்மா பெயரில்தான் மின் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே இது சம்மந்தப்பட்ட விபரங்களை சொல்லியுள்ளேன். அது எனது சின்ன தாத்தா ராதாகிருஷ்ணனும், குப்புசாமி தாத்தாவும் வாய்மொழியாக மாற்றிக்கொண்டார்கள். இதுவரை என் அம்மா பெயரில் ஆவணம் ஏற்படவில்லை. மின் இணைப்பு மட்டும் என் அம்மா பெயரில் உள்ளது. ராதாகிருஷ்ணனும், குப்புசாமியும் மாற்றிக்கொண்டதற்கு ஆவணம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் அம்மா நகையை அடகு வைத்து அந்த வீட்டை கட்டினார். அதை குப்புசாமிதான் கட்டினார் என்றால் சரியல்ல. அப்போது குப்புசாமி உயிருடன் இல்லை. தற்போது அந்த வீட்டை பானிபூரி கடைக்கு மாத வாடகை ரூ.1000/-த்திற்கு வாடகைக்கு விட்டுள்ளோம்.

10) தற்போது என்னிடம் காட்டப்படும் மின் கட்டண ரசீது எனது அம்மா பெயரில் உள்ளதுதான். அந்த 0612600311057 என்ற எண்ணில் ரம்யா பெயரில் உள்ள மின் கட்டண குறிப்பு கணினி பதிவிறக்க நகல் **பி.வா.சா.ஆ.4.**

11) எனது அப்பாவிற்கும், பெரியப்பாவிற்கும் 2002ம் வருடம் ஊர் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் சொத்து பிரித்த பின்பு எனது அப்பாவும், பெரியப்பாவும் சேர்ந்து போர்வெல் போடுவதற்கு கடன் வாங்கியுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது.

12) 5ம் பிரதிவாதி சுப்புலெட்சுமி கரூர் கோடங்கிபட்டியில் குடியிருந்து வருகிறார்கள். சுப்புலெட்சுமியின் கணவராகிய எனது தாத்தா வேணுகோபாலை எனக்கு தெரியும். அவருக்கு கண்கள் தெரியாது என்றாலும், அடுத்தவர் உதவியுடன்தான் வெளியில் செல்ல நேரிடும் என்றால் சரிதான். அவரால் தன்னிச்சையாக வேலை செய்ய இயலாது என்றால் கொல்லை வேலைகளை பார்ப்பார்.

13) 'அ' அட்டவணை சொத்தை விற்றுத்தான் எனது தாத்தா 'ஆ' அட்டவணை சொத்தை வாங்கினார் என்று சொல்லியிருப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதில் சர்வே எண். 426/2, 426/3 சொத்துக்கள் நாங்கள் குடியிருக்கும் வீட்டிற்கு பின்னாடி உள்ளது. அந்த சொத்தில் பாதியளவில்தான் எங்களுக்கு பிரிபட்ட சொத்து உள்ளது என்றால் சரியல்ல. அந்த சொத்தில் இன்றளவும் நாங்கள் தான் இருக்கிறோம் என்றால் ஆமாம். உயில்படி நாங்கள் பாதி , எனது பெரியப்பா குடும்பம் பாதி பிரித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல.

14) வழக்குரையில் 'அ' அட்டவணை சொத்தை விற்றுத்தான் எனது தாத்தா 'ஆ' அட்டவணை சொத்தை வாங்கினார் என்று சொல்லியிருப்பது பொய் என்றால் அந்த சொத்தை விற்று பரம்பரை சொத்தில் விவசாயம் செய்து கூட்டாகத்தான் சொத்தை வாங்கினார்கள். பரம்பரை சொத்தின் சர்வே எண்கள் எனக்கு தெரியாது. அடுத்து விசாரணையில் சொல்கிறேன்.

15) 'அ' அட்டவணை சொத்தில் 365/4 மீனாட்சிக்கு எனது அப்பா விற்றதில் அடக்கம் என்றால் எனக்கு தெரியாது. எனது அப்பாதான் மேற்படி சொத்தை விற்றார் என்றாலும், அதற்கு அனைவரும் சேர்ந்து கையெழுத்து போட்டார்கள் என்றாலும் எனக்கு தெரியாது. எனது அப்பா சொத்தை விற்கவில்லை. எனது தாத்தா குப்புசாமி இறந்த பின்னர் , எனது பெரியப்பா, அத்தை,

பாட்டி அனைவரும் சேர்ந்து விற்றதுபோல் இந்த சொத்தை காண்பித்து எனது தகப்பனார் ஏற்பாட்டில்தான் சொத்து விற்கப்பட்டது என்றால் சரியல்ல.

16) மேற்படி விபரங்கள் அனைத்தும் எனது தகப்பனாருக்கு தெரியும் என்றாலும், எனது அப்பாவை விசாரித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் தஞ்சாவூரில் ஒன்றாக வசித்துக்கொண்டு உண்மையை மறைத்து பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

17) இந்த வழக்க தாக்கல் செய்யும்போது எனது அப்பா மலேசியாவில் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். வழக்கிற்கு பின்னிட்டு எனது அப்பாவிற்கு அறிவிப்பு அனுப்பியுள்ளோம். அந்த அறிவிப்பு திருப்பப்பட்டுவிட்டது. எனது அப்பாவிற்கு எல்லாம் தெரியும் என்றாலும், நாங்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல.

18) உயில் ஆவணத்தை பற்றி 2018ல் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது தெரியும் என்று சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தை 8வது ஆவணமாக எனது அப்பா பெயரில் 2008ம் வருடம் எடுத்ததை இந்நீதிமன்றதில் வா.சா.ஆ.8ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் மேற்படி ஆவணம் எனது சின்ன தாத்தா வேணுகோபால் குடியிருந்த பூட்டியிருந்த வீட்டினை ஓடுகள் பிரிந்து விழுந்ததால் சுத்தம் செய்யும்போது கிடைத்த ஆவணம்.

19) வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நாயக்கர்பட்டியில் வசித்தால் ஊர்மக்களுக்கு தெரிந்துவிடும் என்பதால், அதை மறைப்பதற்காக தஞ்சாவூருக்கு குடிபெயர்ந்தோம் என்றால் நான் திருச்சியில் வேலைசெய்யும் போது எனது அப்பா செந்தில்குமார் ' வெளிநாட்டிலிருந்து வந்திருந்தார், நாங்கள் வழக்கு தாக்கல் செய்தபிறகு எனது அப்பா எனது அம்மாவையும், தங்கையையும் அடித்துவிட்டார். அதனால் நான் அவர்களை பாதுகாப்பதற்காக எனது தாத்தாவின் உதவியுடன் தஞ்சாவூரில் வீடு பார்த்து அவர்களை வைத்தேன்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.